பதிவஞ்சல் ஒப்புகையுடன்

## சென்னை–6, குடும்ப நல இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ஆணை

## முன்னிலை: திரு.வி.பால்ராஜ், எம்.காம்.,

ந.க.எண்.4664/குந/நி1/2020

நாள்: 06.07.2021

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பணியிடை மரணமடைந்த திரு.வெங்கடாசலம் என்பவரின் மகன் திரு.பாலமுருகன் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.4846/குந/நி1/2017, நாள் 04.02.2019.
2. விருதுநகர் மாவட்ட துணை இயக்குநரின் கடிதம் எண்.179/ குந/ நி/2019, நாள் 24.06.2020.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, (Q1) நாள் 26.02.2021.
4. அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை நாள் 16.03.2021.
5. அரசு கடித எண்.35278/ஏடி2/2020–2 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை நாள் 15.04.2021.

*******

**ஆணை:**

பார்வை (1)ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகள் 10 (ஏ) (1) ன் கீழ் திரு.வெ.பாலமுருகன் (த/பெ (லேட்) திரு. வெங்கடாசலம் வட்டார சுகாதார புள்ளியியலாளர், ஆரம்ப சுகாதார நிலையம், உப்பத்தூர், விருதுநகர் மாவட்டம்) என்பவர் கருணை அடிப்படையின் கீழ் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம், உப்பத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார சுகாதார புள்ளியியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. வெங்கடாசலம் என்பவர் 12.01.2003 அன்று பணியிடை மரணமடைந்துள்ளார் அவர் அப்பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கப் பெற்றவர். அவரின் பிறந்த தேதி 01.12.1948 என்பதால் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.11.2006 ஆகும். எனவே பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மகன் திரு.வெ.பாலமுருகன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி உரிய காலகெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். அவரின் பிறந்த தேதி 06.10.1981. அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாலும் திரு.வெ.பாலமுருகன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட

குடும்ப நல செயலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளார். தனியர் 13.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4ல் காணும் கடிதத்தில் தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் இணைந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குமாறு விருதுநகர் மாவட்ட குடும்ப நல துணை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் மீது நாளதுவரை எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என சான்றளித்துள்ளார்.

எனவே, பார்வை (3)ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (4) மற்றும் (5)ல் காணும் அரசு கடிதங்களில் அறிவுறுத்தியுள்ளபடி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வெ.பாலமுருகன் என்பரின் தற்காலிக பணியினை அன்னார் இளநிலை உதவியாளராக அவர் பணியில் இணைந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் பார்வை (5)–ல் காணும் அரசு கடிதத்தின் படி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும். இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

வி.பால்ராஜ்,
இணை இயக்குநர்(நிர்வாகம்)

பெறுநர்
திரு.வெ.பாலமுருகன், இளநிலை உதவியாளர்,
மாவட்ட குடும்ப நல செயலகம், விருதுநகர்,
விருதுநகர் மாவட்டம் (துணை இயக்குநர் வழியாக)

நகல்
1. துணை இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்,
மாவட்ட குடும்ப நலச் செயலகம், விருதுநகர்,
விருதுநகர் மாவட்டம்.
2. தனியரின் பணிப்பதிவேடு.
3. இருப்புக் கோப்பு
4. உபரி.

உண்மைநகல் /உத்தரவுப்படி/ அனுப்பப்படுகிறது/

15/7/2021

கண்காணிப்பாளர்.

15/7/21

ந.க.எண்: 729/இ3/நி/21 நாள்: 13/8/21

அனுப்பப்படுகிறது

பெறுநர்:
திரு.வெ.பாலமுருகன்
இளநிலை உதவியாளர்
இவ்வலுவலகம்.

Received
13.8.21

for 13.8.21
துணை இயக்குநர்
மருத்துவம் ஊரகநலப் பணிகள்
மற்றும் குடும்பநலம்
மாவட்டக் குடும்பநலச் செயலகம்
விருதுநகர்

13/8/21